# போது

போது - 7 இதழ் - 49

ஆடி - ஆவணி 2006

தோற்றம் * 5-5-1998



**நிர்வாக ஆசிரியர்**

(Managing Editor)

சுவாமிஜீ

போல் சற்குணநாயகம். யே. ச.

**ஆசிரியர்**

(Editor)

வாகரைவாணன்

**நிர்வாகம்:**

(Management)

சி.எம். ஒக்கஸ்

**பணிமனை:**

உளநல உதவி நிலையம்,

15, வெபர் வீதி,

மட்டக்களப்பு.

**தொலைபேசி:**

065 - 2222842

E-mail: ppccpal@sltnet.lk


தொ

நூலகம்

## ஓர் அபூர்வ அரசு அதிகாரி

ஒரு நாட்டின் உச்சக் கட்ட வளர்ச்சிக்கு அந்நாட்டின் அரச தலைவன் (ஜனாதிபதி அல்லது பிரதம அமைச்சர்) மேற்கொள்ளும் உறுதியான - சீரான நிர்வாக முறைமையினையே அச்சாணியாகக் கொள்ள முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும் நாடுகள் இரண்டு. ஒன்று சிங்கப்பூர், மற்றது மலேஷியா.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய சிங்களத் தலைவன் ஒருவன் இன்னும் தோன்றாமையே அதன் இன்றைய சீரழிவுக்கான முதன்மைக் காரணமாக கொள்ள முடிந்தாலும்-நாட்டின் ஏனைய நிர்வாக நடவடிக்கைகளில் அதன் அரசு அதிகாரிகள் காட்டும் அக்கறையின்மை- ஏனோதானோ என்ற இயல்பு - உதவி நாடி வரும் பொதுமக்களை உதாசீனப்படுத்துதல் என்பன நாடு நிர்வாகத் துறையில் பெருமளவில் நீத்துப் போனமைக்கான துணைக் காரணங்கள் என நாம் கோடிட்டுக் காட்டினில் யார்தான் இல்லையென்று கூறிடக் கூடும்?

இத்தகு சூழ்நிலையில் ஆயிரத்தில் ஒருவர்போல இலங்கை நிர்வாகத் துறையில் ஒருசில அதிகாரிகள் இருக்கவே செய்கிறார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் வாகரை உதவிப் பிரதேச செயலாளர் செல்வி. ஆர். ராகுலநாயகி அவர்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்ற

காலத்தில் இருந்தே மிகவும் பிற்பட்ட பிரதேசமாகத் தோற்றம் தரும் கோறளைப் பற்று வடக்கின் (வாகரை) உதவிப் பிரதேச செயலாளர் செல்வி. ஆர் ராகுலநாயகி அவர்கள் ஓர் அபூர்வ அரசு அதிகாரிதான்; ஐயமில்லை.

அப்பட்டமான எளிமை - ஒரு பெண்ணுக்கே உரிய அன்பு - ஆதரவு - விருந்தோம்பும் பண்பு - ஒருவன் பிரச்சினையைப் புரிந்து கொண்டு பேசும் நேர்த்தி - அதிகாரம் - அந்தஸ்து அற்ற அடக்கம் - பெருந்தன்மை - இந்த உயர் குணங்களின் உறைவிடமாகத் திகழுபவர் செல்வி. ஆர். ராகுலநாயகி என்பதை அவரை நன்கு அறிந்த யார்தான் இல்லையென்று கூறிவிட இயலும்?

இவ்வரிய குணங்களை ஆபரணமாக அணிந்த அவர் ஓர் இலக்கியவாதியாகவும் திகழ்வது இனிமையான செய்திதான். புதுக்கவிதை எழுதுதல் அவருக்கு பூர்வீகத்திலேயே கிடைத்த கொடைபோல் தோன்றுகின்றது. கோறளைப்பற்று வடக்கு பிரதேசச் செயலகப் பிரிவின் சுனாமி சிறப்பு மலரில் (2005) அவரின் கைவண்ணமே கோலோச்சுவதையும் காண முடிகின்றது.

அரச உயர் அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டு அற்புதமான இலக்கிய கர்த்தாவாகவும் திகழ்ந்த இலங்கையர்கோன், மகாகவி ஆகியோரின் வரிசையில் ராகுலநாயகிக்கும் இடமுண்டு என்பதற்கு அவரின் புதுக்கவிதைகளே போதுமானவையாகும்.

இலக்கிய நெஞ்சம் உண்மையிலேயே இனியது. எவருக்கும் உதவும் தன்மையுடையது - அநியாயத்திற்கு அடிபணியாதது. தர்மத்திற்கு தலைவணங்கும் தன்மையது - இப்படிப்பட்ட ராகுலநாயகி அவர்கள் வயதிலும் மிக இளையவர். இன்னும் வளர வேண்டியவர்; வானளவு உயரவேண்டியவர்.

மட்டக்களப்புத் தமிழகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திட, விழுந்து கிடக்கும் தமிழினத்திற்கு விசை ஏற்றிட செல்வி. ஆர். ராகுலநாயகி போன்ற அதிகாரிகள்தான் எமது இன்றையத் தேவை.

கோறளைப்பற்று வடக்கின் வளர்ச்சிக்கும் - அங்கு குவிந்து கிடக்கும் அபலைத் தமிழர்களின் வாழ்வுக்குமாக இடைவிடாது உழைக்கும் உதவிப் பிரதேச செயலாளர் செல்வி. ஆர். ராகுலநாயகியைப் 'போது' மனமாரப் பாராட்டி மகிழ்கின்றது.

*அன்புடன்*

**வாகரைவாணன்**





# இன்னுமொரு முறை யேசுவே...!



இனியென்ன மிச்சம்
என் யேசு பரனே!
கனியோடு பிஞ்சு
காயெல்லாம் வீழும்
பனிபோலும் வாழ்க்கை
படைப்பென்ப தேனோ?
நனி வாழ்ந்த தமிழர்
நலங்கெட்டுப் போனார்

நீ வந்தால் போதும்
நின்றெரியும் கொடிய
தீ யடங்கிப் போகும்
திருவுளமே வெல்லும்
மூவுலகும் பணியும்
முதல்வனே தேவா!
பூவுலகம் தன்னில்
பூந் தென்றல் ஆவாய்

ஷெல், குண்டு தாக்கு
சிறு மழலை மீதும்
பல் முனையிற் கொடுமை
படும்பாடு போதும்
கொல் தொழிலே செய்யும்
கோனரசு நாட்டில்
வல்லவனே தேவா
வந்தெம்மை மீட்பாய்

ஏரோதன் போலும்
இங்கு சில மனிதர்
பாராளும் வெறியில்
பலி கொள்ளுகின்றார்
தேராயோ இதனை
தெய்வம் நீ வந்து
பாராயோ எம்மை
பணிவாகக் கேட்டோம்

கண்ணிவெடி, வீசும்
கைக்குண்டு வகைகள்
எண்ணில் மனம் இடியும்
இது என்ன வாழ்க்கை?
கண்ணில் நிறை பொருளே
கன்னி மரிமகனே
இன்னல் தனை நீக்க
எழுந்து வா அய்யா!

குந்த இடமில்லை
குடல் எரியும் பசியால்
இந்த விதி ஏனோ?
என் யேசு பரனே
நொந்த இனம் தமிழர்
நோய் தன்னைத் தீர்ப்பாய்
பந்தமுடன் அழைத்தோம்
பரம் பொருளே தேவர்!

தூர உனை வைத்துத்
துதித்ததினால் உலகில்
பேரழிவு நிகழும்
பிழை தன்னைப் பொறுப்பாய்
கோரமது இங்கு
கோலோச்சு தய்யா
ஈரமுள தெய்வம்
இயேசு நீ தானே

உருகி அழுகின்றோம்
ஓலமிடும் கடல் போல்
பெருகி வழிகின்றோம்
பெருமானே தேவா
அருகில் நீ இருந்தால்
அல்லல் வருமாமோ?
கருகிப் போம் பயிர்கள்
கருணை மழை பொழிவாய் !

தலை மீது விமானம்
தாவி வரும் குண்டு
அலை மோதும் உள்ளம்
அவலம் யார் அறிவார்?
கொலை காரர் சூழ
குழந்தை போல் நாங்கள்
மலை போலும் துன்பம்
மாறும் நாள் என்றோ?

பஞ்சம், பசி நோய்கள்
பட்டினியால் மரணம்
நஞ்சு என ஆட்சி
நரகமது மேலாம்
கெஞ்சுகின்றோம் எங்கள்
கிறிஸ்தரசே தேவா
தஞ்சமென வந்தோம்
தயை செய்ய வாராய்!

உன்னால் தான் மீட்பு
உண்டு நாம் அறிவோம்
மண்ணாளும் மனிதர்
மறும் என்ன செய்யும்?
விண்ணிருந் தெழுவாய்
விடிவொன்று தருவாய்
பொன்னடியில் வீழ்ந்தோம்
புது வாழ்வு வேண்டும்

படுகொலைகள் நித்தம்
பகல் இரவு நேரும்
நடுவழியில்: பல்லில்
நாம் வாழும் வீட்டில்
சுடுகாடா நாடு?
சுவாசிக்கும் காற்றும்
கொடுந் தீயைக் கொட்டும்
குளுமை வருமாமோ?

ஆரணி

(அடுத்த இதழில் முடியும்)







# கி.பி. எட்டாம் நூற்றாண்டிலே...

-வரலாற்றுச் சிறுகதை-

அலைகடல் அரண் செய்யும் அந்தப் பேருவளை (பாபரின்) மண்ணில் எல்லாவிதச் சிறப்போடும் எழுந்து நிற்கின்றது அஸ்மஸ்ஜிதுல் அப்ரார் என்று அழைக்கப்படும் இலங்கை முஸ்லிம்களின் முதலாவது பள்ளிவாசல். கடல் மூன்று பக்கமும் நின்று காவல் செய்யும் கெச்சிமலை நெய்தற்கரையில் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப் பட்ட இந்தப் பள்ளிவாசலின் கதவுகளில் தென்னிந்தியக் கலைவண்ணம் அப்படியே தெரிகின்றது.

பள்ளிவாசலுக்குச் சற்றுத் தூரத்தில் பழமையும் புதுமையும் பின்னிய ஒரு தனி அழகோடு அஸ்பாஸியதுல் நஸ்ரியா என்னும் இலங்கை முஸ்லிம்களின் முதலாவது கல்லூரி பேருவளை மண்ணிற்கே பெருமை தரும் ஓர் அரிய நினைவுச் சின்னமாகத் தனக்கே உரிய கம்பீரத்தோடு கண்களை அள்ளிக் கொள்கிறது.

அன்று வெள்ளிக்கிழமை. வழக்கம் போலக் காலைத் தொழுகையை நிறைவு செய்து விட்டு பள்ளிவாசலிலிருந்து வெளியே வந்த அப்துல்லா மரைக்கார் ஏதோ நினைத்தவராய், கால்புதையும் அந்தக் கடற்கரை மணலில் மெல்ல நடக்கின்றார். இதம் நிறைந்த அந்த இனிய வேளையில் காற்றுக்கு அவர்மீது என்னதான் கோபமோ அது ஓடி வந்து அவர் தலையில் அணிந்திருந்த குல்லாவைத் தட்டிக் கீழே வீழ்த்தி விடுகின்றது.

காற்றின் இந்த அதிரடித் தாக்குததலைச் சற்றும் எதிர்பாராத அறுபது வயதைக் கடந்த மரைக்கர் ஓர் இளைஞனைப் போல பாய்ந்து சென்று அந்தக் குல்லாவைத் எடுத்துக் கொண்டு தொடர்ந்து அதே மந்த கதியில் நடக்கிறார். கண்கள் அங்கு அலைகளால் ஏற்றுண்டு கிடக்கும் பல வண்ணச்சிப்பிகள்மீது கவிகின்றன.

சின்னஞ்சிறு வயதில் இதே கடற்கரையில் சினேகிதர்களோடு வந்து இது போன்ற சிப்பிகளைப் பொறுக்கி எடுத்து மடிக்குள் கட்டிக் கொண்டதை நினைவு கூர்ந்த மரைக்கார், சற்றுநேரம் தனது நடையை நிறுத்தி விட்டு கடலையும் அதில் தொழிலுக்காகச் செல்லும்

மீனவர்களின் தோணிகளையும் உற்று நோக்குகின்றார். அவர் மனம் திடீரென்று ஆயிரத்து இருநூறு ஆண்டுகளைப் பின்நோக்கிச் செல்கின்றது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டு... அரேபியா அதிகாரப் போட்டியின் அரங்கமாகின்றது. நீயா நானா என்று நிலைத்துவிட்ட அந்தப் போட்டியில் கலீபா அப்துல் மெலக் பின் மர்வான் வாகை சூடுகின்றான். வஞ்சகமும் கொடுமையும் நிறைந்த இந்த உமையாவின் கூர் வாள் காசிம் குடும்பத்தாரை நோக்கி நீளுகின்றது .

போரை விரும்பாது வர்த்தகத்தையே தம் வாழ்வாகக் கொண்டிருந்த அந்தக் குடும்பம் கலீபாவின் வாளைக் கண்டு கலங்குகிறது. அதனால் அந்தப் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் பலர் ஒரு சில பெண்களோடு கூட்டம் கூட்டமாக நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

யூபிரட்டிஸிலிருந்து தெற்கு நோக்கிப் பயணித்த காசிம் குடும்பத்தாரின் கப்பல்கள் இந்தியத் தீபகற்பத்தின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த கள்ளிக்கோட்டை ,குதயிலன்,காயல் ஆகிய கரையோரக் கிராமங்களைச் சென்றடைகின்றன. கப்பலில் இருந்து இறங்கிய அரேபிய முஸ்லிம்களைக் கண்டதும் அப்பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் திரண்டு வந்து அன்புக்கரம் நீட்டி ஆதரிக்கின்றனர். காலகதியில்,தமக்கு ஆதரவுக்கரம் நீட்டிய தமிழினத்துப் பெண்களையே தம் தாரங்களாக ஏற்ற முஸ்லிம்கள் அந்த மண்ணின் மாப்பிள்ளை ஆகின்றனர்.

இதே போன்று இன்னும் பல கப்பல்கள் இலங்கைத் தீவின் பாபரீன் (பேருவளை) ஜம்புகோளம் (யாழ்ப்பாணம்) கோகர்ணம் (திருகோணமலை) மாந்தை (மன்னார்) ஆகிய கரையோரப் பிரதேசங்களை வந்து சேர்கின்றன.

பேருவளைக் கடற்கரையில் கப்பலில் இருந்து இறங்கிய சற்று வித்தியாசமான முகத்தோற்றத்தையுடைய இனத்தாரைக் கண்ட சிங்கள மக்கள் யார் இவர்கள் என்று தமக்குள் வியந்தவர்களாய் ஒதுங்கி அப்பால் நகர்கின்றனர். இலங்கையின் உட்பிரதேசங்களில் விவசாயத்தில் ஈடுபட்டுக்கொண்டு , தாமும் தம்பாடும் என்று வாழும் சிங்களமக்கள் அராபிய முஸ்லிம்களை அதிசயமாகப் பார்த்ததில் ஆச்சரியம் இல்லைத்தான்.

ஆனால் இலங்கையின் வடபால் “நாகதேசம்” எனும் பேரில் ஒரு இராச்சியத்தை ஆண்டு கொண்டு தென்னிலங்கையிலும் மிகுந்த செல்வாக்கோடு விளங்கும் மலபாரிகள் என்னும் தமிழர்கள் கடல் வாணிபத்தில் ,தமக்கு அறிமுகமான முஸ்லிம்களை இன்முகத்தோடு வரவேற்று அளவளாவி தம் வீடுகளுக்கு விருந்தினர்களாக அழைத்துச் செல்கின்றனர்.தமிழர்களின் நட்பின் ஆழமும் விருந்தோம்பும் பண்பும் தமிழின் சுவையும் முஸ்லிம்களின் நெஞ்சை தண்ணெனக் குளிரச் செய்கின்றன.





அரேபியாவில் இருந்து வந்த இந்தப் புதிய இனத்தினர் தமிழர்க்கு “சம்பன்காரர்” மட்டுமன்றி சம்பந்தியாகவும் ஆகின்றனர் .இது இலங்கை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தையே எழுதி விடுகின்றது.

காலம் எனும் காட்டாறு வேகமாகப் பாய்கின்றது... கடல் வாணிபத்தில் முஸ்லிம்களின் கை ஓங்குகின்றது. அவர்களின் கப்பல்கள்,எகிப்து அரேபியா, பாரசீகம், மொசபத்தேமியா, தென்னிந்தியா, மலக்கா, சுமத்திரா, யாவா, சீனா முதலான நாடுகளின் கரைகளையெல்லாம் அளந்து வருகின்றன.

இலங்கைத் தீவின் புகழ்பெற்ற முத்துக்கள் ,மாணிக்கங்கள் ,இரத்தினங்கள் முதலான விலை மதிப்பிடற்கரிய பொருட்களை ஏற்றிச் செல்லும் அக்கப்பல்களில் ஏலம் கறுவா சாதிக்காய்,சந்தனம் ஆகிய பொருட்களின் வாசம் காற்றில் கலந்து எங்கும் கமகமக்கின்றது.

முஸ்லிம்களின் கடல்வாணிபம் பேருவளையைச் செல்வ செழிப்பு மிக்க பட்டினமாக்கி விடுகின்றது. அங்காடிகளெல்லாம் குவிந்திருக்கும் அரும் பெரும் பொருட்களோடு சீனப்பட்டும் அலங்காரச் சின்னமாக ஒளிர்விடுகிறது.

சிங்கள மொழியில் எழுந்த “கோக்கில சந்தேசய,” பரெவி சந்தேசய ,திஸ்ர சந்தேசய ஆகிய இலக்கியங்கள் பேருவளையின் இந்தச் செல்வச் செழிப்பை அழகிய சித்திரமாகவே தீட்டிவிடுகின்றன.

வாணிபம் முஸ்லிம்களின் வாழ்க்கையையும் வானளாவ உயர்த்திவிடுகின்றது. மனைகள் எல்லாம் மாளிகைகளாக விளங்குகின்றன. அவற்றில் தமிழ்த் தாய்க்கும் முஸ்லிம் தந்தைக்கும் பிறந்த மழலைகள் சிந்தும் தமிழ் மதுரமாக இருக்கின்றது.

பேருவளையின் செல்வச் செழிப்பு -காயல் பட்டினத்தைக் காந்தமாக இழுத்தெடுக்கின்றது. கூடவே துணி நெய்தல், பெட்டி பாய் இழைக்கும் கைப்பணியையும் காயல் இங்கே கொண்டு வந்து சேர்க்கின்றது.

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை மண்ணில் குடியேறிய தம்மினத்தவரின் வரலாற்றில் ஆழ்ந்திருந்த மரைக்காரை பேருவளை துறைமுகத்தில் கேட்ட பெருத்த ஆரவாரம் திரும்பிப் பார்க்கச் செய்கின்றது. அங்கே.... இந்தத் தேசத்தின் ஈடில்லாப் பொருட்களைக் குவியல் குவியலாக ஏற்றிக் கொண்டு கப்பல்கள் தம் கடல் பயணத்தை ஆரம்பிக்கத் தயாராகின்றன.

**—வாகரைவாணன்**

## அகத்தின் தேடல் - 2

## மனித முகங்கள்

தூரவிருந்தால் உறவுகள் மலரும்
சொந்தங்கள் கூட துடித்துப் பதைக்கும்...
அண்மித்துப் பார்த்தாலே
அகமது விளங்கும்!

இனிக்கப் பேசும் நுனிநாக்கின்
அடிப்புறம் இருப்பது நஞ்சென
நம்மிடை பலரைக் காண்கிலமோ...?
நரம்பிலா நாக்கென
நவில்வதும் பொய்யோ?



மனிதன் ஒருவன் முகமது நூறு ...
முகங்கள் நூறிடை உண்மை முகத்தினை
உணர்வ தெங்ஙனம்...?
உரைத்திடுவீரே!

" ஏறுமயிலேறி விளையாடுவது முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே..."
ஆறுமுகனுக்கே ஆறு விளக்கங்கள்
நூறு முகங்கட்கு எத்தனை விளக்கமோ?


-கண. மகேஸ்வரன்





## மெய்யியல் ஞானிகள் 2

### சோக்ரட்டீஸ் (469-399BC)




சில வரலாற்றாசிரியர்கள் சோக்கிரட்டீஸ் பற்றி நிறையத் தகவல்கள் இருப்பதாக கூறுகின்றனர். சில வரலாற்றாசிரியர்கள் அவர் பற்றி மிகக் குறைவான தகவல் களே இருப்பதாகக் கூறுகின்றனர். எவ்வா றாயினும் சந்தேகத்திற்கிடமின்றி அவர் ஏதெனிய பிரஜை. இளைஞர்களுக்கு இலவசமாக மெய்யியலைக் கற்றுக்கொ டுத்தார். அவரது இருபெரும் மாணவர்க ளான செனோபேன், பிளேட்டோ ஆகிய இருவரும் அவரைப்பற்றி தொகுதி தொகுதி யாக நூல்களை எழுதினர்.

சோக்கிரட்டீஸ் கி.மு 470ல் ஏதென்ஸ் நகரில் பிறந்தார். தந்தை பெயர் சொபரோனிக்கஸ். பெரும்பாலும் சிற்பம் செதுக்குவது அவரது தொழில், தாய் பெரும்பாலும் தாதியாக பணியாற்றினார். தந்தையைப் போல் சோக்கிரட்டீஸ் துணிவும் நேர்மையும் மிக்கவராக விளங்கினார். சோக்கிரட்டீஸ் கல்வி வரலாறு தெளிவானதாக இல்லை. ஆயினும் முன்னைய மெய்யியல் சிந்தனைகளின் அறிமுகம் அவருக்கு இருந்தது. தியோ பிட்டஸின் கூற்றுப்படி அனெக்சி ராஸ்கோரஸின் வாரிசான சேலஸ் இன் பள்ளியில் நிச்சயமாகவே அவர் ஒரு அங்கத்த வராக இருந்துள்ளார்.

சோக்கிரட்டீஸ் இன் உருவத்தோற்றம் வினோதமானதாக இருந்தது. அவர் குள்ளமாகவும் பருத்த சரீரத்துடனும் இருந்தார். மூக்குத் தட்டை ஆகவும் பெரிதாகவும் இருந்தது. வயோதிபமாகும் போது தலை வழுக்கை விழுந்திருந்தது. அவரது நடை ஒழுங்கற்றதாக இருந்தது. அவர் பழையதையே எப்போதும் அணிந்தார். குளிர்காலத்தில் அணிந்ததை எப்போதும் அணிந்திருந்தார். அவர் தமது தோற்றம் பற்றி அக்கறை

கொள்ளவில்லை. எக்ஸ்ஸேன்திபியா என்ற பெண்ணை மணந்தார். இக் காலத்தில் நடந்த சில யுத்தங்களில் அவரும் கலந்து தனது சேவையைத் தனது நகரிற்கு வழங்கினார். புதிய கொள்கைகளைப் பரப்பி இளைஞர் சிந்தனையை கெடுக்கின்றார் என்பன போன்ற குற்றச் சாட்டுகளின் பேரில் ஏதென்ஸ் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்தது.

## பிளேட்டோ (428-347BC)



பிளேட்டோ எப்போது பிறந்தார் என்பது பற்றி சில ஐயங்கள் உள்ளன. கி.மு 427 அல்லது 429 பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஆண்டாகும். புகழ்பெற்ற ஏதென்ஸ் குடும்பத்தில் பிறந்தார். இவரது இயற் பெயர் அரிஸ்டோட் டோக்கிளஸ் (Aristicles) திடகாத் திரமும் அழகும் கொண்ட அவரது தோற்றத்திற்கு ஆக "பரந்த மார்பழகன்" என்று பொருள்படும் Plato என்று அழைக்கப்பட்டார். அன்றிருந்த சிறந்த கல்வியைப் பெறும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. அவர் ஹெராக்ளிட்டஸ் இன் சீடரான கார்ட்டிரலஸ் இடம் மெய்யியலைக் கற்றார். அனெக்ஸிகோரஸ் இன் நூல்களையும் அவர் கற்றார்.

சோக்ரட்டீஸ் இன் கடைசி 8வருடகால வாழ்வில் பிளேட்டோ அவரது மாணவராகவும் நண்பராகாவும் விளங்கினார். சோக்கிரட்டீஸ் ஐ பிளேட்டோ சந்திக்கும் போது அவரது வயது20. சோக்கிரட்டீஸ் இன் அறிவுத் தூண்டுதல் பிளேட்டோவின் சிந்தனைகளில் பெரும் செல்வாக்கை பெற்றிருந்தது. கி.பி 399ல் சோக்கிரட்டீஸ் கொல்லப்பட்டதும் பிளேட்டோ எதன்ஸ் நகரிலிருந்து வெளியேறி விட்டார். தனது அன்புக்குப் பாத்திரமான ஆசான் கொல்லப்பட்ட வேதனை அதற்கு காரணமாக இருந்தது. பல நாடுகளுக்கும் பிராயணம் செய்து கல்வி கற்பதில் ஈடுபட்டார்.





அவரது பிரயாண காலத்தில் இத்தாலியில் பைத்தரவாதிகளிடம் பாடம் கேட்டதாகச் சில தகவல்கள் கூறுகின்றன. பிரயாணத்திலிருந்து திரும்பிய பிளேட்டோ ஏதென்சிஸில் தமது "அக்கெடமி' யை 388ல் ஆரம்பித்தார். ஐரோப்பாவின் முதலாவது பல்கலைக்கழகமாக இது கருதப்படுகின்றது. கி.மு 404ல் அரசியலில் சேருமாறு அழைத்தனர் .

ஆனால் சோக்கிரட்டீஸின் மரணத்திற்கு காரணமான அந்த ஆட்சியைப் பிளேட்டோ வெறுத்தார். சோக்கிரட்டீஸின் கொலைக்கு வழிவகுத்தார்கள் என்ற காரணம் காட்டி ஜனநாயகவாதிகளையும் அவர் வெறுத்தார். சோக்கிரட்டிசை தண்டிப்பதற்காக நடத்தப்பட்ட வழக்கு விசாரணையின் போது பிளேட்டோவும் பிரசன்னமாகி இருந்தார்.

பிளேட்டோவின் அக்கெடமியில் மெய்யியல் பிரதான பாடமாகப் போதிக்கப்பட்டது. கணிதம், பௌதீகம், வானவியல் போன்ற விஞ்ஞான பாடங்களும் அங்கு கற்பிக்கப்பட்டன.

உலகின் பல பாகங்களிலும் இருந்தும் அங்கு கல்விக்காக மக்கள் ஒன்று கூடினர்.இது பிளேட்டோவின் வாழ்வின் மூன்றாவது கட்டமாகும். அக்கெடமியில் தொழில்முறை போதனாசிரியராகவும் மெய்யியலாளராகவும் தனது அறிவு ஆர்வத்தை அவர் நிறைவேற்றினார்.

சோக்கிரட்டீஸின் கொள்கைகளில் அவருக்கு கருத்து முரண் பாடுகள் இருந்த போதும் தான் கல்விப் போதனைக்காக ஊதியம் பெற்றுக் கொள்ளாததன் மூலம் தனது ஆசான் மீதான பற்றுதலை அவர் நிருபித்தார்.

குடியரசு நூலில் தான் இலட்சிய குறிக்கோளாக சித்தரித்த அரசு தனது வாழ்நாளில் காணக்கூடியது அல்ல என்று அவர் உணர்ந்திருந்தாலும் அதற்கான சீர்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பமாக வேண்டும் என அவர் விரும்பினார். அதற்காக அவர் முயற்சித்த போதும் அது வெற்றியளிக்க வில்லை. அதனால் அவர் தமது 70வது வயதில் நாடு திரும்பி தனது அக்கெடமியின் வளர்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்டார்.மிகவும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் கல்விப்பணியில் தனது வாழ்வைச் செலவிட்டு 82வயதில் காலமானார்.

(கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ்
எழுதிய மெய்யியல் நூலிலிருந்து)

# படகுமக்கள்

படகுமக்கள் பதுங்கிப் ....... பதுங்கி
கடலில் வாழ்க்கை ...... காவல்யாரோ?

அஞ்சி.. அஞ்சி அலையில் தமிழர்
தஞ்சம் கோரி...... தமிழகம் நோக்கி.....

சொந்த மண்ணைத் துறந்த தமிழர்
அந்த மண்ணில் அகதிகளாக.......

வள்ளம் கவிழ்ந்து வாரியில் வீழும்
பிள்ளை எத்தனை? பெண்கள் எத்தனை?

இன்று நேற்றா இந்நிலை எமக்கு?
அன்று அந்த 58ல் இருந்து!

நெஞ்சம் உடையும் நிகழ்வது கண்டு
வஞ்சகர் செயலால் வாழ்வது அழியும்

பாதை மாறிய பயணம் இதுவோ?
ஆதரவில்லா அநாதைகளாமோ?

துரோணர்







## மட்/மன்ரேசாவில்
## WORK SHOP ON GROUP THERAPY நிகழ்வு



ஆவணித் திங்கள் 15ம் திகதி ஆரம்பமான மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட DR.MICHAEL MCNULTY அவர்கள் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் காட்சி



நிகழ்வில் கலந்து கொண்ட அருள்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளாரும் உளவியல் ஆலோசகர்களும்

# மரபும் மாற்றமும்



மரபு என்பது மனித வாழ்க்கை யோடு ஒட்டி வருவது. இது சங்கிலிக் கோவை போல சந்ததி சந்ததியாய்த் தொடர்ந்து வரும் பெற்றி வாய்ந்தது. இந்தத் தொடர்ச்சியினைப் பரம்பரை அல்லது பாரம்பரியம் என்றும் இயம்புவர். சில சமயம் இது மங்கி மறைந்து விடுவதுமுண்டு. ஆனாலும் மீண்டும் உயிர்க்கவல்லது. தொல்காப்பியர் தமது நூலில் மரபியலைப் பதிவு செய்தமைக்கு அதன் முக்கியத்துமும் சிறப்பும் காரணிகள் ஆகும்

தொல்காப்பியர் காலத்திற்கு முன் பிருந்தே தமிழர் வாழ்வோடு மரபு நிழல் போலத் தொடர்ந்து வருதலால் இதற்குப் பழமை என்றும் பொருள். இது பற்றித் தமிழ்அறிஞர் அ.ச.ஞானசம்பந்தர் அவர்கள் இவ்விதம் எழுதுவார்.

பழமை (Convention) பாராட்டு வதே மரபின் அடிப்படை. உலகிடை உள்ள பல பொருட்களில் நாம் மரபையே பின்பற்றுகின்றோம். அதிலும் கலைகள் எல்லாம் மரபை ஒட்டியே நிலைத்துள்ளன. மரபு மட்டும் இல்லையானால் ஒருவர் ஆக்கிய கலையை மற்றவர் அனுபவிக்க முடியாமற் போய்விடும்.இலக்கியம், மரபுகளை ஒட்டி நிலைத்திருக்கும் ஒரு கலையாகும் (இலக்கியக்கலை - பக்.01)

தமிழர்களைப் பொறுத்தமட்டில் மரபு அவர்களின் நான்கு நில அமைப்பு முறையிலேயே துல்லியமாக விளங்கக் காணலாம். நிலம், அதன்இயல்பு, வாழும் மிருகங்கள், பறவைகள், மக்களின் தனித்துவம் ஆகியனவே, முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என வகுக்கப்பட்டு அவை சங்க இலக்கியப் பண்புகளாகவும் அங்கீகரிக்கப்பட்டன.

ஆயினும் இம் மரபு அடுத்து வந்த காலப்பகுதியில் (சங்கமருவிய காலம்) மாற்றம் அடைந்து விட்ட மையைக் காண்கின்றோம். புலாலும் கள்ளும் உண்டு போரையும், காதலையும் தம் வாழ்க்கையாகக் கொண்டிருந்த பொற்காலத் தமிழர்கள் வாழ்வில் கொல்லாமை, கள்ளு ண்ணாமை முதலான அறநெறி கோட்பாட்டை உபதேசம் செய்யும் இலக்கியங்கள் இக்காலப்பகுதியில் தோன்றிவிட்டமையைப் பார்க்கின்றோம். இம் மாற்றத்திற்கு அக்காலத்தின் குழப்பம் மிகுந்த களப்பிரர் ஆட்சி மட்டுமன்றி சமண பௌத்த சமயங் களும் காரணிகளாகின.

இதிலிருந்து ஓர் உண்மை நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. ஒரு நாட்டின் அரசகொள்கைகளும் செயற்பாடுகளும் அந்நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்ப





டுத்திவிடும். இப் பாதிப்பை அவர்களின் இலக்கியக்கலை நன்கு எடுத்துக் காட்டும். இதன் காரணமாகவே இதனை (இலக்கியம்) காலத்தின் கண்ணாடி என்று மொழிவர்.

இந்த மரபு மாற்றத்தை கி.பி 13ம்நூற்றாண்டில் வாழ்ந்த பவணந்தி முனிவர் என்னும் நன்னூலாசிரியர் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினனே' என்று கூறினார்.

நன்னூலாரின் இந்த வார்த்தைகள் நன்கு தெரிந்தெடுக்கப் பட்டவை. ஏனெனில் அவை (கழிதலும் புகுதலும்) இயல்பாகவே ஏற்படும் மாற்றத்தை எடுத்துக்காட்டும். ஆனால் கழித்தலும், புகுத்தலும் எனும் சொற்கள் ஒருவர் தமது விருப்பு வெறுப்புக்கேற்ப செய்யும் மாற்றத்தைக் குறித்து நிற்கும். இதனைத் தமிழ் இலக்கணம் பிறவினை என்று பேசும். எனவே தான் நன்னூலாரின் வார்த் தைகள், மரபு மாற்றம் என்பது இயல்பாகவே ஏற்படவேண்டியதொன்று என நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இதற்குக் காட்டாக பின்வரும் இலக்கிய வரலாற்று நிகழ்வுகளை இங்கே தருதல் ஏற்புடையதாகும்

இன்றையத் தமிழ்க் கவிதை யின் தந்தையென அழைக்கப்படுபவர் மகாகவிபாரதி. ஆனால் 19ம் நூற் றாண்டுக் கவிதையில் ஏற்பட்ட மாற்றம் உடனடியாக வந்ததொன்று அன்று. இது வள்ளலார் என்று போற்றப்படும் இராமலிங்கசுவாமிகள் (1823-1874) கவிதைகளிலேயே காலூன்றி விட்டது. வள்ளலாரின் இக் கவிதை வடிவத் தையே கோபால கிருஷ்ணபாரதி ஏற்ற விதத்தில் பயன்படுத்திப் பேரும் புகழும் பெற்றார்.

தமிழ்க் கவிதை உலகில் தலை எடுத்த இந்த மரபுமாற்றம் இயல்பானதும், படிப்படியானதும் என்பது வெளிப்படை. மகாகவி பாரதி இந்த மாற்றத்தை நன்கு புரிந்து கொண்டு தனது மேதா விலாசத்தால் அக் கவிதை வடிவத்திற்கு மெருகேற்றி பெருவெற்றி கண்டான். இது போன்றே சீவகசிந்தாமணியில் முதல்முறையாகத் திருத்தக்கதேவரால் பயன்படுத்தப்பட்ட விருத்தம் எனும் செய்யுள் வடிவத்தை கம்பன் மிகச் சிறப்பாக கையாண்டு கவிச்சக்கரவர்த்தி எனும் விருதை தனதாக்கிக் கொண்டான்

இப் பெரும் புலவர்களைப் போல பழைய கதைக்குள் தமது சிந்த னையை புகுத்தி "சாபவிமோசனம்" எனும் சிறுகதையைப் படைத்த புதுமைப்பித்தன் சாகாவரம் பெற்ற எழுத்தாளராகவே திகழ்கிறார். புதுமைப்புத்தனின் இந்தக் கதை பற்றி பிரபல விமரிசகர் க.நா.சு. அவர்கள் இவ்விதம் குறிப்பிடுவார்.

புதுமை என்றால் முற்போக்கு என்று ஏதோ இன்று ஏற்றுக்கொள்ளப் பட்ட விஷயங்கள்தான் என்பதில்லை. மரபுக்கு ஏற்ற விஷயமும், மரபுக்கு சேரக் கூடிய சக்திவாய்ந்த விஷயங்களும்

புதுமையானவை. (க.நா.சு-90.பக்-42)

இந்தப் பின்னணியில் பழந்தமிழ் கலைகளில் ஒன்றான நாட்டுக் கூத்தில் புகுத்தப்படும் மாற்றங்கள் பற்றி இங்கு சிறிது ஆராய்தல் பயன் தருவதாகும்.

மட்டக்களப்பு நாட்டுக்கூத்து மரபுவழிநின்று ஆடப்படும் ஆடலும் பாடலும் இணைந்த கலையாகும். யாழ்ப்பாணத்து நாட்டுக்கூத்து போலன்றி, மத்தளம், சல்லரி என்னும் இரண்டு இசைக்கருவிகளின் துணையோடு வெட்டைவெளியில் அமைக்கப்பட்ட வட்டக்களரியில் விடிய விடிய ஆடப்படும் பழந்தமிழ்க் கூத்து இது.

இக் கூத்துக்கலையில் (வாலிவதை, கர்ணன்போர், நொண்டிநாடகம், இராவணேசன்) நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் சில மாற்றங்களைக்கொண்டு வந்தது போல தற்போது போரசிரியர் சி.மௌனகுரு அவர்களும் இராவணேசனில் சில மாற்றங்கள் செய்துள்ளார்.

இவ்வித மாற்றங்களுக்குள்ளான இராவணேசனைத் தொலைக் காட்சியில் பார்த்தபோது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் வட்டக் களரியில் கண்டு களித்த இராம நாடகம் எனது நினைவுத் திரையில் படமாக விரிந்தது.

அந் நாடகத்தில் (இராமநாடம்) இராமன், இராவணன் வேடம் பூண்டு ஆடிய கலைஞர்களின் ஆடலிலும் பாடலிலும் பிரகாசித்த கம்பீரமும் அழகும் அண்ணாவியாரின் கணீரென்ற குரலும், அவரது தாளவரிசையும், பேராசிரியர் சி.மௌனகுருவின் 'இராவணேசன்' பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. இராம இராவணயுத்தம் ஏதோ சிறுவர்கள் ஓடி ஒளித்து விளையாடுவது போலவே உருவாக்கப் பட்டிருந்தது. மேலும், இது நாடகமாகவோ, கூத்தாகவோ அமையாமல் இரண்டுங் கெட்ட நிலையில் இருந்தமையை அவதானித்த போது இந்த மாற்றம் தேவை தானா என்ற கேள்வியே மனத்தில் எழுந்தது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல (தமிழ்க்கலைவிழா சிறப்பு மலர் 1994-பக்-49) 'இந் நாட்டுக்கூத்துக்கள் நம் மூதாதையரின் பண்பாட்டுச் சின்னங்களாகும்" எனவே இவற்றில் செய்யப்படும் எத்தகைய மாற்றமும் அப் பண்பாட்டுச் சின்னங்களைச் சிதைத்துவிடும் ஒரு முயற்சி ஆகிவிடலாம். ஏனெனில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் சு.வித்தியானந்தன் மேற்கொண்ட மீள் உருவாக்கம் தற்போது இன்னுமொரு பேராசிரியரால் மீண்டும் மீள் உருவாக்கத்திற்குட் படுகின்றது. இது போல் இன்னு மொரு நாற்பது ஆண்டுகளின் பின் மற்றுமொருவர் இந் நாடகத்தை மீள் உருவாக்கம் செய்வராயின் நமது எதிர்காலச்சந்ததியினர் இக் கூத்தின் வேரை எங்கு எப்படி கண்டுபிடிக்கப் போகிறார்கள்? வேர்தான் இருக்குமா?

இத்தகையதொரு அவலம்





சிகிரியா, அஜந்தா ஓவியங்களுக்கு மாமல்லபுரத்துக் கடற்கரைச் சிற்பங்களுக்கு ஏற்பட முடியுமா? ஏற்படத்தான் விடுவார்களா ? இல்லையெனில் நமது நாட்டுக்கூத்து மட்டும் ஏன் காலத்துக்கு காலம் மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டு தனது சுயத்தை இழக்க வேண்டும் ? குறிப்பிட்டதொரு காலத்தின் கண்ணாடியாக அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் ஒரு கலையை மாற்றி அமைத்தல் பழந்தமிழரின் வரலாற்றின் ஒரு பகுதியை மாற்றி அமைப்பது போல் ஆகாதா?

இக்கருத்துக்களைப் பேராசிரியர் அவர்கள் "நூதனசாலை" மனோபாவம் (தினகரன் நாடக விழா மலர் பக்-54) என்று சொல்லக் கூடும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் தமிழரின் இருப்பை மட்டுமன்றி அவர்களின் அடையாளமாகவும் விளங்கும் பழந்தமிழ்க் கலைகளையும் காப்பாற்ற வேண்டுமாயின் நம் ஒவ்வொருவருக்கும் நூதனசாலை மனோபாவம் இருந்துதான் ஆக வேண்டும். இல்லையேல் தமிழன் எனும் அடையாளத்தையே நாம் இழந்து விடுதல் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இச் சந்தர்ப்பத்தில்,பாரம்பரிய நாடகங்கள் பற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் பயன்தரு கருத்துக்களை நாம் இங்கு பகிர்ந்து கொள்ளுதல் நனி நல்லது.

மரபுவழி வடிவங்களிற் காணப்பெறும் உத்திமுறைகளைப் பயன்படுத்தி நவீன நாடகங்கள் பயிலப்படுகின்றன. எனினும் உருவம் உள்ளடக்கம் எனும் வகையில் பாரம்பரியமான நாடக மரபுகள் தொடர்ந்து போற்றப்படுவதையும், அப் பாரம்பரிய நாடகங்கள் உள்ளடக்கத்தில் நவீனத்துமான நாடகங்களிலிருந்து வேறுபட்டவை என்பதையும் திட்டவட்டமாக எடுத்துக் கூறலாம். பாரம்பரிய நாடகங்கள் பற்றிய ஒரு முக்கிய அம்சம் அவை எழுத்தறிவு நிலைக்கு முற்பட்ட குழுவினரின் (PRE-LITERATE) பயில்வுக்கும் மகிழ்வுக்குமுரியதாகும். இந் நாடகங்களின் மரபுகள் பல இந்தப் பண்பு காரணமாகவே தோன்றியுள்ளன எனலாம்.

ஆனால் அவை இன்று பண்பாட்டுச் சின்னங்கள் என்ற வகையில் எழுத்தறிவுள்ளோர் மட்டத்தில் பயிலப்படுவதையும் போற்றப்படுவதையும் காணலாம். (தமிழ்க் கலைவிழா சிறப்பு மலர்-1994-பக்49)

பேராசிரியரின் மேற்படி கருத்துக்கள் பாரம்பரிய நாடகத்தின் தனித்துவத்தையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவன. ஆதலால், இக்கருத்துக் களுக்கமைவாக நமது பாரம்பரியக் கலைகளில் ஒன்றாகிய நாட்டுக் கூத்தினை நவீனம் எனும் பெயரால் செய்யப்படும் மாற்றங்கள் விழுங்கி விடாது காத்தல் நமது கடன் என்று சொல்லவும் வேண்டுமா?

~வாகரைவாணன்

# மூதூர்



முந்து தமிழ் ஊர்
மூதூர்! இதில்
எந்தவித ஐயமும்
இல்லை, இல்லையே

கொட்டியாரம் என்றும்
கூறுமிதை உலகம்
ஒட்டியாரம் போலும்
ஒயிலான நகரம்

நெய்தல் நிலம் இதன்
நிகரில்லா அழகு
மையழகுக் கடல்
மற்றுமொரு அழகு

கடலலைக் கரங்கள்
கரைதன்னைத் தடவும்
மடல் தாழம் பூக்கள்
மணமள்ளிச் சொரியும்

அருகுள்ள ஊர்கள்
அத்தனையிலும் தமிழர்
ஒரு காலம் வாழ்ந்தார்
உலகமிது அறியும்!

இனிய தமிழ் நாமம்
ஏந்து மிவ்வூர்கள்
கனி என இனிக்கும்
காதில் விழும் போது!

ஈச்சிலம்பற்றை,சம்பூர்
எழில்மிகு பச்சையூர்
பூச்சொரியும் பூமி
புராதனத் தமிழ்மண்!

இந்த மண் தன்னை
இழந்து விடலாமோ?
சொந்த மண் மறந்து
தூங்குவதும் சரியோ?

கபிலன்





அறியவேண்டிய அரிய மனிதர் – 23

## மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

ஒரு கவிதை, இரண்டு கவிதைகளை ஏதாவது ஒரு இதழில் எழுதி, அவைகள் வெளிவந்துவிட்டால் உடனே பெயருக்கு முன்பு "கவிஞர் " என்று அடைமொழியை சேர்த்துக் கொள்கின்றோம். ஆனால் இரண்டு இலட்சம் கவிதைகளுக்கு மேல் எழுதியும்,பழங்கால இலக்கியங்கள் அத்தனையும் மனப்பாடமகச் சொல்லியும், பிறர் கேட்ட மாத்திரத்தில் இலக்கணப் பிழையில்லாமல் ஐந்து மணி நேரம் வரையிலும் கூட தொடர்ந்து கவி பாடிய தமிழர் ஒருவர் இருந்திருக்கிறார்.அவரைப்பற்றி சிறுவர்களுக்குத் தெரியுமா?

அவர் பெயர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. அதவத்தூர் எனும் ஊரில் 6.4.1815ல் பிறந்தவர்.இவருடைய பெற்றோர் சிதம்பரம்பிள்ளை. அன்னத்தாச்சி அம்மையார். அச்சு வடிவிலான நூல்கள் அதிகமிராத அந்தக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஓலைச்சுவடியில் படித்தவர்.நினைத்த மாத்திரத்தில் கவிதை எழுதும் திறமும்,பழந்தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்யும் ஆர்வமும் கொண்டவர். அதற்காக ஊர்ஊராகச் சென்று பெரும் புலவர்களையும், பிறரையும் யாசித்து அவர்களிடமிருந்து நூல்களை வாங்கி வந்து படியெடுத்த பிறகு திருப்பித் தந்து விடுவார்.

படி எடுப்பது இப்போதைய "ஜெராக்ஸ்" மாதிரி அல்ல. வாங்கி வந்த மூலநூலை ஓலைச்சுவடியில் திரும்ப எழுவது. ஒரு முறை படித்தாலே இந்த நூல்கள் அவருக்கு பழக்கமாகிவிடும். அவற்றில் சந்தேகம் எழுந்து விட்டால், அதை விளக்கும் புலவரை நாடி நடக்க ஆரம்பித்து விடுவார். இலக்கணங்களையும், இலக்கியங்களையும் படிக்க ஆசிரியர்களைத் தேடிச் சென்று படித்து அறிவை வளர்த்துக் கொண்டார். இப்போது பள்ளிக்கூடத்திற்கு வந்து படிப்பது போல அல்லாமல் ஆசிரியர்களைத் தேடிச் சென்று அவர்கள் ஏவும் வேலைகளைச் செய்து, அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி, அதன் பிறகே தமிழ் படிக்க முடியும். இத்தகைய சிரமம் இருந்த போதும் அவர் தமிழறிவை வளர்க்கத் தயங்கியதே இல்லை .

மீனாட்சி சுந்தரனார் பெரும் புலவராக மதிக்கப்பட்ட காலத்தில், தான் இன்னும் ஒரு மாணவன் என்ற எண்ணம் அவருக்கு இருந்து வந்தது. கீழ்வேளூர் சுப்பிரமணியதேசிகர் என்பவரிடம் "இலக்கண விளக்கம் " என்ற நூலை தொகை எவ்வளவு தெரியுமா? பத்து ரூபாய். சிலர் நெல்லாகவும் கூட

படிக்க சென்றார். ஆசிரியர் சார்பில் பல கண்டிப்புக்கள் சொல்லப்பட்டன. ஆசிரியர் குடும்பத்தைப் பாதுகாத்தல் உட்பட அவருக்கு மாதச் சம்பளமாக தனியாக 20ரூபாய் கொடுக்க வேண்டும் என்பது வரை அந்தக் கண்டிப்பு இருந்தது. அந்தக் காலத்தில் இருபது ரூபாய் என்பது பெரிய தொகை. மூன்று மாத சம்பளத்தை முற்பணமாகச் செலுத்தவேண்டும் என்று கேட்ட போது, தனது "கடுக்கனை" விற்று ஆசிரியருக்கு கட்டணம் செலுத்தியிருக்கிறார். இவ்வளவு தமிழார்வம் மிக்கவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. அவரை ஆதரித்த லட்சுமணப்பிள்ளை என்பவரின் வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நடந்து கொண்டிருந்தது. அதைப் பொறுப்புடன் கவனிக்க அனுப்பப்பட்ட மீனாட்சி சுந்தரனார் ஒவ்வொரு தமிழ்ப் புலவர்களையும்,தேடிச் சென்று தமிழ் நூல்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார்.

1842 ல் "அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ்" என்ற நூலை வெளியிட்டார். பெங்களூரில் வாழ்ந்த தேவராஜப் பிள்ளை என்பவருக்காக "குசேலோ பாக்கியானம்" "சூதசங்கீதை" ஆகிய நூல்களை எழுதியதோடு, தேவராஸா பிள்ளையே அதை எழுதியதாக வெளியிடவும் செய்தார். 1854 ல் சென்னைக்கு வந்த போது,மயிலாப்பூர் குளத்திற்கு அருகே அமைக்கப்பட்டிருந்த சத்திரத்தைப் பற்றிப் பாடினார். அதற்கு "சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை' என்று பெயர் .

1854ம் ஆண்டு திருவாவடு ஆதினத்து வித்துவானாக நியமிக்கப்பட்டார். அம்மடத்து தலைவர் அம்பலவாண தேசிகரைப்பற்றி ஒரு "கலம்பகம்" எழுதினார். அவரது சிறப்புக்களை உணர்ந்து அவருக்கு "மகாவித்துவான் " என்ற பட்டம் கொடுத்து மடத்தினர் பாராட்டினர்

திருவாவடு துறை ஆதினத்தில் தனது மாணவர்களுக்குப் பாடம் நடத்தும் போது அதிக நேரம் ஆகிவிடும். அப்போதெல்லாம் ஆதீனத்தின் தலைவரும்,மற்றவர்களும்,மீனாட்சி சுந்தரனார் வரும்வரை காத்திருந்து தான் உணவு உண்பார்கள். உயரமான மீனாட்சி சுந்தரனார் உணவு உண்ணும் வாசல் தாழ்வாக இருந்ததால் குனிந்து சென்றதைப் பார்த்துவிட்ட ஆதினத்தலைவர்தமிழ் தலைகுனியலாமா? என்று கூறி வாயிலை உயர்த்திக் கட்டச் செய்தார்.

மீனாட்சி சுந்தரனார் மயிலாடுதுறையில் வாழ்ந்த போது அவருடைய செலவை ஏற்றுக்கொள்ள அங்கு வாழ்ந்த பெரும்செல்வர்கள் முன் வந்தனர். அதன்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் ஒரு பெருந்தொகையை மீனாட்சி சுந்தரனாரின் செலவுக்குக், கொடுத்து வந்தார்கள். கொடுக்கப்பட்ட பெரிய





கொடுத்தார்கள்.

மீனாட்சி சுந்தரனார், கற்க கடினமான எந்த ஒரு நூலையும் மனப்பாடமாக வைத்திருப்பார். தன்னைப் போலவே தனது மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக தான் உடலை வருத்தி, தேடிபடியெடுத்த அரியநூல்களையெல்லாம் மாணவர்களுக்குக் கொடுத்து மகிழ்வார். மாணவர்களுக்காக ஊர் ஊராகச் சென்று பிறரிடம் உள்ள நூல்களை வாங்கித் தருவார். நடமாடும் புத்தகசாலையான அவரே தம்முடைய சொந்த செலவில் பிள்ளைகளை படிக்க வைத்தார். மாணவர்களுக்கு திருமணம் செய்து வைப்பது, அவர்களுக்கு வீடு கட்டித் தருவது, பரிசுப்பொருள்களைத் தருவது என்று மாணவர்களுக்காகவே வாழ்ந்தார்.அவரின் வருமானம் மாணவர்களின் மளிகை பாக்கிக்கே சரியாக இருந்தது. மாணவர்களை அன்புடன் அழைப்பார்.

திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரிக்கு ஒரு தமிழாசிரியர் தேவைப் பட்டபோது மீனாட்சி சுந்தரனார்அதற்கு தகுதியானவராகக் கருதப்பட்டார். மாதம் நூறுரூபாய் சம்பளம், மற்றும் பல வசதிகள் செய்து தரப்படும் என்று நிர்வாகத் தினர் தரப்பில் சொல்லப்பட்ட போது, அதை தனது மாணவன் சாமிநாதனுக்குத் தரும்படிக் கேட்டுக்கொண்டார்.

'சீர்காழிக் கோவை' கும்பகோண புராணம் 'திருநாகைக் காரோண புராணம் ,திருப்பெருந்துறை புராணம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். கும்பகோணப் புராணம் நூலை யானை மீதும், மீனாட்சிசுந்தரனாரை பல்லக்கிலும் வைத்து ஊர்வலமாக சுமந்து வந்தனர், தமிழ் நாட்டில் மட்டுமன்றி வடநாடுகளிலும், கடல்கடந்த அயல் நாடுகளிலும் அவர் புகழ் பரவியிருந்தது. அவரை ஆதரிப்பதை பெருமையாக செல்வந்தர்கள் கருதினார்கள். அவருக்கு நோய் ஏற்பட்டால், நோய் தீர்க்கும் மருந்தாக தமிழ் நூல்களைத்தான் பயன்படுத்துவர். நோயுற்ற காலங்களில் பிறரைப் படிக்க வைத்து அதிலேயே லயித்துப் போவார்.நோயும் பறந்து போகும். நினைத்த மாத்திரத்திலேயேகவிதை பாடும் அவர் தொடர்ந்து ஐந்து மணி நேரத்திற்கு மேலாக கவிதை பாடி,தனது மாணவரை அதைப் பின் தொடர்ந்து எழுதச் சொன்னார். மாணவர் எழுத முடியாமல், நிறுத்திய போதும்கூட மகாவித்துவான் கவிதையை நிறுத்தவில்லை.

கண்ணில்லாத அந்தகரான "நாராயணன் " என்பவருக்கும் பாடத்தை திறம்பட சொல்லிக்கொடுத்திருக்கிறார். அவரிடம் 17 வயதில் மாணவராக சேர்ந்தார் தமிழ் தாத்தா உ.வே சாமிநாத ஐயர். தோட்டத்திலே உள்ள

செடிகளில் புதியதளிர்கள் தோன்றுகிறதா என்று தினந்தோறும் பார்த்து வருவது மீனாட்சி சுந்தரனாரின் வழக்கம். இதை அறிந்து கொண்டு, முன்பாகவே எழுந்து தோட்டத்திற்குச் சென்று எந்தெந்த செடிகளில் புதிய தளிர்கள் தோன்றியுள்ளன என்பதைக் கண்டறிந்து ஆசிரியர் கேட்காமலேயே சொல்லி வந்தார். சிறுவனின் ஆர்வத்தைக் கண்டு பாடம் கற்பித்தார் மீனாட்சி சுந்தரனார்.

இவ்வாறு தமிழையும், தமிழ்மாணவர்களையும் வளர்ப்பதற்காக தன் வாழ்நாளைக்கழித்தவர் 1.2.1876ல் உயிர்துறந்தார். வந்த பொருளையெல்லாம் வாரிவழங்கிவிட்ட அவருக்கு, இறக்கும்போது மூவாயிரம் ரூபாய் கடன் இருந்தது. அப்போதை திருவாவடுதுறை ஆதினத் தலைவர் சுப்பிரமணியர் தாம் அவர் கடனை அடைத்து, அவருடைய ஓலைச் சுவடிகளை நூலகத்தில் ஒப்படைத்தார். அவ்வளவு பெரிய அறிஞருக்கு கவிஞர் பட்டம் கூட இல்லை. அவரும் தன்னை கவிஞர் என்று சொல்லிக் கொண்டதில்லை. அவர் எழுதிய சில நூல்களும், கவிதைகள் சிலவும்மட்டுமே கிடைத்துள்ளன. அதையும் அறிந்த கவிஞர்கள் அதிகம் பேரில்லை என்பதே உண்மை. இவர் மாதிரி கவிதை எழுதியவர்களை உங்களுக்குத் தெரியுமா?

*(தினகரன் - தமிழ்நாடு)*

## சில வரலாற்றுச் செய்திகள்

- பிரதாப முதலியார் சரித்திரம் 1876ல் இயற்றப்பட்டது.
- ஆங்கில மொழியில் நாவல் இலக்கியம் 18ம் நூற்றாண்டில் உதயமானது.
- கி.பி. 993ல் இராஜ இராஜ சோழனால் இலங்கை கைப்பற்றப்பட்டது.





## தொலைத்தல்

நானும் வகிப்பது
என்னவோ
உயர் பதவிதான்
ஆனாலும் வாழ்வைத்
தொலைக்கின்றேன்
நான்குமணி நேரம்
தினமும் பஸ்சிற்குள்!



தூரத்தில்
நீயிருப்பது கூட
என் துன்பத்திற்கு
ஒரு காரணம் தான்

## பொதுச் சேவை

ஒன்றும் புதியதல்ல
பொதுச் சேவை
ஆனாலும்
இது மீண்டும்
பிறக்க வேண்டும்
நிருவாகம்
ஒன்றென
நிருவகிக்க!

—செங்கனி



# புத்தரின் போதனை

ஆசையினால் மனிதன் செய்யும் பாவச்செயல்களுக்கேற்ப பிறப்பெடுத்து பிறவித்துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் மனித உயிர்களின் மீட்சிக்காக துன்பத்திலிருந்து நீங்கி நல்வழி காட்ட காலகாலமாக அவதாரங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்த அவதாரங்களில் இற்றைக்கு 2550 வருடங்களுக்கு முன் சித்தாத்தராகப் பிறந்து ஞானம் பெற்று கௌதம புத்தராகி துன்பத்திலிருந்து மீட்சிபெற வழி சொன்ன புத்தரது கொள்கைகள், சிந்தனைகள் பலநாடுகளில் பரவி இன்றும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஞானம் பெற்றவர்கள் புத்தர்கள். இவர்கள் வழி காட்டிகளாக இருக்கிறார்கள். அவர்கள் கூறிய நல்வழிச் சிந்தனையில் நடக்கும் போது மனிதனது ஆசைகள் அறுபட்டு, மோட்சத்திற்கான வழி கிடைக்கும்.

எந்த மதமானாலும் அன்பு வழியில் ஆசைகளை அறுத்து நல்வினைகள் செய்து பாவம் செய்யாது அனைத்து உயிர்களையும் நேசித்து மனதில் நல்ல எண்ணங்களோடு வாழவே வழிகாட்டுகின்றது. பல பெயர்களில் பலவிதமான வழிபாட்டு முறைகள் கைக்கொள்ளப்பட்டு வந்தாலும் பெறும் பலன் ஒன்று தான். பல நதிகள் பல பெயர்களில் ஓடிய போதும் இறுதியில் கலக்குமிடம் கடலாகவே உள்ளது. இது போன்ற மதங்கள், அவை காட்டும் மார்க்க முறைகள், வழிபாடுகள் பல வழிகளில் இருந்தாலும், பெறும் பயன் ஒன்றாகத்தான் உள்ளது. புத்ததர்மம், அமைதி வழியில் அன்பு நெறியில் துன்பத்திற்கான வழிகளையும் அதிலிருந்து நீங்கி மோட்சமடையும் வழிகளையும் கூறுகின்றது.

இந்து மதத்தினருக்கு பகவத் கீதை புனிதமான நூலாகக் கொள்ளப்படுகின்றது. கிறிஸ்தவ மதத்தினருக்கு பைபிளும் இஸ்லாம் மதத்தவர்க்கு திருகுர்ரானும் புனித நூலாகக் கொள்ளப்படுவது போல, கௌதம புத்தர் அவர்களினால் அருளப்பட்ட 'தம்மபதம்' புனிதமாகப் போற்றப்படுகின்றது.

அரஹந்த பிக்குகள் ஒன்று கூடி கௌதம புத்தரின் போதனைகளைத் திரட்டி முதல் சங்கத்தில் தொகுத்து தந்திருக்கும் நூல்களில் ஒன்று புத்த மதத்தின் புனித நூலான தம்மபதம் ஆகும். பீடங்களின் ஒன்





றான சூத்திர பீடத்தைச் சேர்ந்த ஐந்து பெரும் பகுதிகளில் ஒன்றான பஞ்ச மகா நிகாயங்களில் குத்தக நிகாய என்னும் பகுதியில் இருக்கிறது. இந்த தம்மபதத்தில் 26 பிரிவுகள் அடங்கியிருக்கின்றன. இந்த 26 பிரிவுகளில் முதலில் உள்ளது யகமவர்க்கம்.

இந்தப் பகுதியில் எண்ணங்கள் பற்றித்தான் கூறப்படுகின்றது. எண்ணங்கள் இவை எங்கிருந்து தோன்றுகின்றன என நோக்கினால், அவை மனித மனங்களில் இருந்து தான் தோன்றுகின்றன. நல்ல எண்ணங்களானாலும் சரி, தீய எண்ணங்களானாலும் சரி, இவைகள் மனித மனங்களில் இருந்துதான் தோன்றுகின்றன. எண்ணங்களாகிய தர்மங்கள் நல்லவையாக இருக்க வேண்டும்.

எண்ணங்கள் மனதிலிருந்து உண்டாகின்றன. அவைகளுக்கு மனதே முதன்மையானது. ஆசையினால் ஒருவன் தீய எண்ணங்களோடு பேசினாலும், சரி, தீய செய்கைகளைச் செய்தாலும் சரி, அவற்றினால் உண்டாகும் துக்கங்கள் இழுத்துச் செல்லும் எருதினைப் பின் தொடர்ந்து போகும் வண்டியைப் போல அவனுடைய அடிச்சுவடிகளைப் பின்பற்றித் தொடர்கின்றன என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த யமக வர்க்கத்தில் 2ஆவது பகுதியில் நிழல் ஒருவனோடு கூட வருவது போல் அவனது நன்மையான செய்கையினால் ஏற்படும் பலன்களும் கூடவரும் என்று குறிப்பிடப்படுகின்றது. அதாவது, மனத்திலிருந்து தோன்றும் எண்ணங்கள், மனத்தினாலேயே உண்டாக்கப்படுகின்றன. இவ்வாறு உண்டாக்கப்படும் எண்ணங்களில் ஒருவன் தூய எண்ணங்களோடு பேசினாலும்சரி, நற்காரியங்கள் செய்தாலும் சரி. அவற்றினால் உண்டாகும் நன்மைகள் எப்போதும் நீங்காத நிழல் போன்று அவனைப் பின் தொடர்கின்றன. மனிதனது நிழல் அவனை விட்டு நீங்குவதில்லை. அவன் செல்லும் பாதை எல்லாம் தொடர்ந்து செல்லும். அதனால் தன் நிழல் தன்னை தொடர்வதைப் போல் அவனது நற்செயல்கள் அவனைப் பின் தொடர்வதனால் ஒவ்வொரு மனிதனும் நல்லசெயல்கள் செய்து நன்மைகளைப் பின்னே வரும்படி செய்ய வேண்டும். வாழுகிற நாட்களில் நல்ல காரியங்களில் செய்து நற்பலன்களை தன் பின்னே வரும்படி செய்வது போல தீயவற்றைச் செய்யும் போதும் தீமைகளே பின் தொடரும்.

மனதில் ஒருவன் தீய எண்ணங்களே கொண்டிருந்தால், தீயவற்றையே எதிர்நோக்க வேண்டி வரும். மற்றைய மனிதர்களைப் பற்றிய தாழ்மையான எண்ணங்கள் அவனால் தனக்கு ஏற்பட்ட அவமானங்கள் இவற்றை மனதிலே எண்ணிக் கொண்டிருந்தால், அவனுக்குள் எழும் பகைமை உணர்வு எப்போதும் மறையப் போவதில்லை. பகைமையை பகைமை உணர்வினால் வெல்ல முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அவன் என்னை இகழ்ந்து பேசினான், அவன் என்னை அடித்தான், அவன் என்னை வென்றான், என் பொருட்களை கவர்ந்து கொண்டான் என்பது போன்ற எண்ணங்களை

ஒருவன் எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தால் அவனுடைய பகைமை ஒரு போதும் தணியாது. இவ்வாறு யமகவர்க்கம் 3ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மனதளவில் இத்தகைய எண்ணங்களை நினைத்துக்கொண்டிராவிடில் அவனுடைய மனம் சாந்தமடைகின்றது. அன்புக்கு மட்டும் ஆட்படுகின்றது. இவ்வாறு அன்புக்கு ஆட்படும்போது பகைமை உணர்வு அடியோடு அழிந்து போகின்றது.

பகைமையை பகையினால் அழிக்க முடியாது. அன்பினால் மட்டுமே அந்த உணர்வைத் தணிக்க முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். பகைமை உணர்வினால் கலகத்தை, சண்டையை விரும்புவோர் அதனைச் செய்ய முனைவோர் என்றைக்கோ, நாம் ஓர் நாள் இறப்போம் என்பதை உணர்வதில்லை. மரணத்தைப் பற்றி மறப்பவர்கள் மற்ற உயிர்களுக்கு தீங்கிழைத்து வருத்தத்தை கொடுக்கக் கூடாது என்பதை உணர்வதில்லை. எமக்கு மரணம் வரும் மற்ற உயிர்களுக்கு துன்பம் கொடுக்காமல் நல்லவற்றை செய்ய வேண்டும் என எண்ணுபவர்கள் கலகம் செய்வதை நிறுத்தி விடுவார்கள். கலகம் செய்பவர்கள் சோம்போறிகள். இவர்களை ஐம்பொறிகள் வென்றுவிடும். இந்த ஐம்பொறிகளுக்கு ஆட்பட்டு அழிவுப் பாதையில் போகும் இவர்களை பலத்த சூறாவளிக் காற்று பலமற்ற மரத்தை விழுத்துவது போல ஆசைகள், காமங்கள் இவர்களை அடித்து விழுத்தி விடும். இந்த புலன் வழி பெறும் இன்பத்திற்கு முழுமையாக ஆட்படாமல், அளவுக்கு மீறின போசனம் உண்ணாமல் பக்தியோடும் சுறுசுறுப்போடும் மனிதன் வாழும் போது தான் அவர்களால் ஞானத்தை உணர முடியும். இதனை விட மஞ்சள் ஆடை நிறத்தைத் தெரிவு செய்து அணிவதற்கு தகுதியுடையவர்கள் யார் என்பது பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. மஞ்சல் மங்களமானது. மாசு மறுவில்லாத தூய்மையுள்ளவர்களே மஞ்சள் ஆடையை அணிவதற்கு தகுதியானவர்கள். மாறாக கோபம், குரோதம், பகைமையுணர்வு, கலகம் செய்யும் குணம் கொண்டவர்கள் இந்த மஞ்சல் வணணத்தை அணிவதற்கு தகுதியில்லாதவர்கள். மனதளவில் மாசுக்களை நீக்கி அடுத்தவர்களுக்கு அநியாயம் செய்யும் எண்ணத்தை அகற்றி தன்னடக்கத்தோடு மெய்மையுணர்வு ஒருவர் பெற்றிருப்பாரேயாயின் உண்மையில் அவர் இந்த மஞ்சள் ஆடையை அணியத் தகுதியுள்ளவராவார். மனதளவில் மாசு நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்கள் உண்மைத் தன்மையை உணர்ந்தவர்களாக இருப்பார்கள். இல்லாததை உள்ளதென்றும் உள்ளதை இல்லாததென்றும் கூறமாட்டார்கள். உள்ளதை காணபவர்கள் மெய்யுணர்வு பெற்றதனாலேயே அதனை அடைந்திருக்கிறார்கள். எப்போதும் வீடு கட்டும் போது மழை, வெயில் உள்ளே புகாதபடி நன்கு வேயப்பட்ட ஓலைகளால் அமைக்கப்பட்ட வீட்டிற்குள் மழை, வெயில் உள்ளே புகுவதில்லை. இப்படி





மனதையும் நல்ல பண்பினால் பக்குவப்படுத்தி இருக்கும் போது காமம், குரோதம் போன்ற தீய எண்ணங்கள் உட்புகுவதில்லை.

இதற்கு மாறாக நாம் தீய எண்ணங்களை வளர்த்துக்கொண்டால், நன்றாக வேயப்படாத வீட்டிற்கு மழை கொட்டி வீடு அழிந்து போவது போன்று இத்தகைய எண்ணங்களினால் நல்ல மனம் சிதைந்து வாழ்க்கையே கெடுதலுக்குள்ளாகின்றது. அதனால், மனிதனானவன் மனதிற்குள் தீயவற்றை வளர்க்காமல் பாவகாரியங்கள் செய்யாமல் இருக்கப்பழக வேண்டும். மனிதன் பஞ்சமா பாதகங்களை செய்யும் போது, இப் பிறவியில் மட்டுமல்ல அடுத்த பிறவியிலும் துன்பமடைகிறான். மற்றைய உயிர்களுக்கும் துன்பம் கொடுத்து தானும் துன்பமடைந்து பாவத்தை சேர்த்துக்கொண்டு மறுமையிலும் துன்பமடைகின்றான். பாவம் செய்பவன் எப்போதும் துன்பமடைகின்றான். இதற்கு மாறாக புண்ணியம் செய்பவன் இந்த பிறவியில் மட்டுமல்ல இனிவரும் பிறவிகளிலும் மகிழ்ச்சியடைகின்றான். தன்னுடைய நல்ல செய்திகளினால் அடுத்தவர்களை மட்டும் மகிழ்ச்சியடைய வைக்காமல் தானும் மகிழ்ச்சியடைகின்றான். அதனால் மனிதர்கள் நன்னெறியில் நடக்க வேண்டும்.

இந்தப் பூமியில் வாழும் மனிதர்கள் இம்மையிலும் மறுமையிலும் உவகை கொள்ளும் பொருட்டு உலகில் வாழும் காலத்தில் தானம் செய்து புண்ணியத்தைச் சேர்க்க வேண்டும். உள்ளத்தை கோயிலாகக் கொண்டு தாங்கள் உயர்ந்த மன எண்ணங்களை மட்டும் அங்கு உலவ விட்டு நல்வழி நடக்க பகவான் புத்தரின் சிந்தனைகள் வழிவகுக்கின்றன. அவர் தம் போதனைகள் மன அழுக்காறு அகற்றி மனிதனை மனிதனாக வாழவைப்பவை. முறைப்படி வாழ்பவை வகுத்து செல்லும் வழிமுறைகள், போதனைகளாகி இருப்பதை தெரிந்து கொண்டு நடப்பதுவே மனித சமூகத்தை மகிமைப்படுத்தும்.

- ஜெயந்தி ஜெய்சங்கர் -
(வீரகேசரி)

## சில வரலாற்றுச் செய்திகள்

- முதலாம் யூலியஸ் போப் ஆண்டவர் தான் டிசம்பர் 25ல் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடும்படிக் கேட்டவர். இதற்கான பிரச்சாரம் கி.பி. 351ல் நடைபெற்றது.
- 1596ல். தான் கிறிஸ்மஸ் மரம் ஜேர்மனியை சேர்ந்த பேராயர் ஒருவரால் அமைக்கப்பட்டது.
- புனித தோமையார் இந்தியா வந்த ஆண்டு கி.பி. 52.

# மேகமே..... மேகமே.....

கார் மேகமே
எங்கே... உனைக்காணோம்?

வெயிற் காலம்
அதனால் 'உனக்கும்
விடுமுறையோ?

நீயில்லாததால்
நிலம்
தீய்ந்து போனது
எப்போது
தேனாகப்
பொழியப் போகின்றாய்?

தாகம் ............. தாகம்
தாங்க முடியவில்லை
மேகமே..
மிக விரைவாக வா..!
உயிர்கள் எல்லாம்
உன்னைத்தான்
எதிர்பார்க்கின்றன
பயிர் வரை..........
பசுமை நிறைய
நீ ஒரு மழைப்பந்தல்
போட வேண்டாமா?

ஊரெல்லாம் குளிர
உனது
உற்சவம் தான் வேண்டும்
ஓடி வா ................

சிவந்தி



# என்னவாகும்?

உதட்டில் ஒன்று
உள்ளத்தில் மற்றொன்று
உதாரணம்......?

பேசுவது சமாதானம்
செய்வது யுத்தம்...

இந்தியாவும் வேண்டும்
பாகிஸ்தானும் வேண்டும்
இடமும் வலமும்
இணைய வேண்டும்
இது என்ன இராஜ தந்திரம்?

சீனாவும் சினேகிதன்
அமெரிக்காவும் நண்பன்
இது என்ன சிந்தனை?

ஒற்றையாட்சியும்
வேண்டும்.
அதிகாரப் பகிர்வும்
வேண்டும்.
இது என்ன
புதிய உபதேசம்?

இரண்டு தோணியில்
கால் வைத்தால்
என்னவாகும்?
இலங்கைத்தீவே
உன்னைத்தான்!

- அபிமன்யு -

# சிந்தனைகள்

இறந்தவர்களுக்கு
எமன்
இருப்பவர்களுக்கு
இந்திரன்

சுதேசியத்திற்குச்
சுடுகாடு
விதேசியத்திற்கு
வேட்டைக்காடு

இலவசங்களின்
இராட்சியம்
இல்லாதவர்களின்
ஏணி

தனித்துவத்தின்
சமாதி
ஊழலின்
உற்பத்தி ஸ்தானம்'

மக்கள் பணியின்
மலிவுக் கடை
சுயநலவாதிகளின்
சுக்கிர திசை

சுனாமி என்பது
இதுதான்"
நீங்கள் என்ன
சொல்கிறீர்கள்?

- பீஷ்மர் -